

# எது அரசாங்கம்?

லெனின்

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**
**நூலக நூல்கள்**
நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**
**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

# எது அரசாங்கம்?

★

லெனின்

★

செஞ்சுடர் பிரசுரம்
மதுரை.

முதற்பதிப்பு: ஆகஸ்ட் 1952.

★

விலை 6 அணா.

★

அச்சிட்டோர்:

ஸ்டார் பிரஸ், மேலமாசிவீதி, மதுரை.

தமிழாக்கம்:

"இஸ்ரா"

# பதிப்புரை

1919ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் தேதி ஸ்வர்டலோவ் கம்யூனிஸ்ட் சர்வகலாசாலையில் புரட்சித் தந்தை லெனின் ஆற்றிய சொற்பொழிவை நூல் வடிவில் தந்துள்ளோம். மக்கள் இதனைப் படித்துப் பயனடைவார்களாக!

—பதிப்பகத்தார்.

# எது அரசாங்கம்?

★

தோழர்களே! இன்று பேசப்படவிருக்கும் விஷயம், நீங்கள் தேர்ந்தெடுத்து எனக்குத் தெரிவித்துள்ளபடி 'அரசாங்கம்' என்பதாகும். ஏற்கனவே நீங்கள் இது விஷயத்தைப்பற்றி எந்த அளவிற்கு அறிந்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. என் கருத்தில் தவறில்லையென்றால், உங்களுடைய திட்டங்கள் இப்பொழுதுதான் துவக்கப்பட்டிருக்கின்றன. இவ் விஷயத்தை கிரமப்படி அணுகுவதில் இதுவே முதல் தடவையாக இருக்கும் என நம்புகிறேன். அப்படியிருக்குமானால் கடினமான விஷயத்தைப்பற்றிய இம் முதல் பிரசங்கத்தில் பொதுமக்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் முறையிலே விளக்கம் தருவதில் நான் வெற்றிபெறாமல் போனாலும் போகலாம். ஒருக்கால், அவ் விதமே நிகழ்ந்தாலும், அதனால் நீங்கள் குழப்பம் அடையாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் 'அரசாங்கம்' என்ற விஷயமே கடினமானது—சிக்கலானதும்கூட. பூர்ஷ்வா அறிஞர்களாலும், எழுத்தாளர்களாலும் ஏனைய விஷயங்களைவிட மிகத்தாறுமாறாகச்சித்தரிக்கப்பட்டிருப்பது 'அரசாங்கம்' எனும் பொருள். எனவே இப்பொருளைப்பற்றிய தெளிவான விளக்

கத்தை, முதல் தடவையாக நிகழ்த்தப்படும் இச்சிறு சொற்பொழிவின் மூலம் அடைந்து விடலாம் என எதிர்பார்க்கலாகாது. இம் முதல் பிரசங்கத்தில் உங்களுக்குப் புரியாத விஷயங்களையோ அல்லது தெளிவாகப் புலப்படாத வாசங்களையோ குறிப்பு எடுத்துக் கொண்டு, அதைப்பற்றி பலமுறை சிந்திக்க வேண்டுகிறேன். ஆகையால் சொற்பொழிவுகளாலும், உரையாடல்களாலும், மீண்டும் மீண்டும் படிப்பதாலும், முதலில் புரியாத விஷயங்களில் நீங்கள் தெளிவுபெறுவீர்கள். நாம் மறு முறை சந்திக்கும் பொழுது, விட்டுப் போன எல்லாவற்றையும், தெளிவாக்கப் படாத விஷயங்களையும் பற்றிய கருத்துக்களை நாம் பரிமாறிக் கொள்ளலாம் என நம்புகிறேன்.

உரையாடல்கள், பிரசங்கங்கள் முதலியவைகளைத் தவிர மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகிய அறிஞர்களின் முக்கிய புத்தகங்கள் சிலவற்றைப்படிப்பதில் உங்கள்நேரத்தைச்செலவிடுவீர்கள்என நம்புகிறேன். உங்களுடைய "சோவியத்மாணவர்கள்வாசகசாலை" யில் வைக்கப்பட்டுள்ள இலக்கிய அட்டவணையிலும், கைப்பிரதிகளிலும் இம் முக்கிய புத்தகங்கள் காணக்கிடக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. உங்களில் சிலர் கருத்து விளக்கங்களைப்பற்றி துவக்கத்திலே அதைரியப்பட்டாலும், அவர்கள் கலங்க வேண்டாமென மீண்டும் எச்சரித்துக் கொள்கிறேன். ஏனெனில் முதலில் புலப்படாத கருத்துக்கள் மறுமுறை படிக்கும் பொழுதோ. அல்லது புதுக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் பொழுதோ விளங்கி விடும் என்பது திண்ணம். 'அரசாங்கம்' என்பது பூர்ஷ்வா எழுத்தாளர்களால் குழப்பப்பட்டிருக்கும் மிகவும் சிக்கலான விஷயம் எனத்திரும்பவும் கூறிக்கொள்கிறேன். இதன் ஆழ்ந்த அறிவையும், தெளிவான கருத்தையும் பெற்று நிபுணத்துவம் அடைய விரும்புவோர் இதைப் பலமுறை படித்தல் வேண்டும். பலப்பல கோணங்களில் ஆராய்ந்தறிய வேண்டும். இதில் கவனத்தைச் செலுத்துவது மிகஎளிதான காரியம்.

ஏனெனில் புரட்சிப் புயல் வீசிய காலங்களைத்தவிர, அமைதி நிலவியபொழுதும் அகில அரசியல் விவகாரங்களுக்கு 'அரசாங்கம்' அடிப்படையானது—மூலாதாரமானது, அரசியல் ரீதியிலோ, அல்லது பொருளாதார ரீதியிலோ ஒவ்வொரு செய்தித் தாள்களிலும் உங்களது கவனத்தைக் கவரும் விஷயம் இதே. ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் உங்கள் சிந்தனைக்கு வரும் விஷயம், "அரசாங்கம்" என்றால் என்ன? அதன் இயல்பு யாது? அதன் முக்கியத்வம் என்ன? முதலாளித்துவத்தைத் தகர்த்தெறியப் போராடி வரும் கம்யூனிஸ்ட் கட்சி, அரசாங்கத்தைப்பற்றி கொண்டிருக்கும் நோக்கம் என்ன? என்பவையே. 'அரசாங்கம்' என்னும் பொருளைப்பற்றி நீங்கள் கேட்கும் பிரசங்கங்கள், நிகழ்த்தும் உரையாடல்கள் ஆகியவற்றின் விளைவாகவும், அதைப்பற்றிப் படிப்பதின்பயனாகவும், நீங்கள் இவ்விஷயத்தை அணுகும் ஆற்றலைப்பெறவேண்டும் என்பது மிக மிக முக்கியமான விஷயமாகும். ஏனெனில், மாற்றுக்கட்சியினருடன் பல மாறுபட்ட சந்தர்ப்பங்களில் 'அரசாங்கம்'எனும் பொருளைப்பற்றி நீங்கள் எதிர்பார்த்திராத பல அற்பமான கற்பனை ஹேஷ்யங்களை எதிர்த்துத் திறம்பட விவாதிக்க நேரிடும். இந்தப் பிரச்சனையைப்பற்றி சொந்த முறையிலே வழி வகுக்கக் கற்றுக் கொண்டால்தான், உங்களுடைய கொள்கையில் போதிய அளவு உறுதி கொண்டவர்களாகக் கருதப் படுவீர்கள். எந்த நேரத்திலும், எவருடனும் வெற்றிகரமாக எதிர்த்து வாதிட முடியும்.

## அரசாங்கம் என்றால் என்ன?

இச் சிறு விமர்சனத்திற்குப் பின், 'அரசாங்கம்' என்பது என்ன? அது எப்படித் தோன்றிற்று? தொழிலாளர் கட்சியெனப்படும் கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தைப் பற்றி கொண்

டுள்ள நோக்கம் எத்தகையது என்ற பல கேள்விகளைத் தெளிவாக்க விரும்புகிறேன். பூர்ஷ்வா வர்க்கத்தின் விஞ்ஞானிகளும், தத்துவ ஞானிகளும், சட்ட நிபுணர்களும், அரசியல் பொருளாதார சாஸ்திரிகளும், 'அரசாங்கம்' என்னும் விஷயத்தைக் குழப்பியிருப்பதைப் போல வேறு எந்த விஷயத்தையும் காணமுடியாது என்று ஏற்கனவே கூறியிருக்கிறேன். அன்று தொட்டு இன்றுவரை 'அரசாங்கம்' என்னும் விஷயம் மத விஷயங்களுடன் பிணைக்கப்பட்டு இருக்கின்றது. மதவாதிகள் மாத்திரமா இத்தனிப்பட்ட ('அரசாங்கம்' என்னும்) விஷயத்தை மத விவகாரங்களுடன் பிணைத்துவிடுகின்றனர்? இல்லை! மதத் துவேஷம் அற்றவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் 'புண்யாத்மாக்களும்' கூட இந்தக் குட்டையைக் குழப்பும் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்; அதற்குத் தத்துவ ரீதியான வியாக்கியானமும் தருகிறார்கள். அவர்கள் வியாக்கியானத்தின்படி அரசாங்கம் என்பது 'ஆண்டவன்' அருளைப் பெற்றதாம்; தெய்வீகமானதாம். மனித வர்க்கத்தை வாழ்விப்பதும், அவன் சக்திக்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்ய அருள் புரியும் ஒப்பற்ற சக்தியாம்! இந்த வேதாந்தம் சுரண்டும் வர்க்கத்தினரின் சிறந்த தயாரிப்பு அல்லவா! முதலாளிகளின் நலனைக் காக்கும் 'நல்வழி' என்றுதானே கூற வேண்டும், பூர்ஷ்வா வர்க்கத்தினரின் இக் கோட்பாடுகள்—பழக்க வழக்கங்கள் மக்களிடையே பரவி அவர்கள் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றி விட்டன. இச்சின்னங்கள் காணாத இடமேயில்லை! மதத்தின் அதிகாரத்திற்குட்பட்டவர்கள் என்ற வதந்திகளை வெறுத்துத்தள்ளி, நிதானமான மனப்பான்மையுடன் அரசாங்கத்தை மதிக்கும் நோக்கமுடையவர்கள் எனக் கூறிக்கொள்ளும் போல்ஷ்விக்குகளின் கொள்கைகளிலும், சோஷலிஸ்ட் புரட்சிக்காரர்களின் கொள்கைகளிலும் கூட இம் மீதமிச்சங்கள் காணப்படுகின்றன. எவரையும் விட அதிகமாக

ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பாதிக்கும் என்ற ஒரே காரணத்தால் இந்த விஷயம் இவ்வளவு குழப்பத்திற்குள்ளாக்கப் பட்டிருக்கிறது. அரசாங்கதத்துவம் சமூக உரிமைகளுக்காகப் பரிந்து பேசுகிறது. சுரண்டலுக்கு சமாதானம் கூறுகிறது; முதலாளித்துவம் ஓங்கி வளர ஆதரவு அளிக்கிறது. எனவே இவ்விஷயத்தைக் குறித்து ஒருபாரபட்சமற்ற போக்கை எதிர்பார்ப்பது மாபெரும் தவறு ஆகும். விஞ்ஞானியென்று சொல்லிக் கொள்பவர்கள், இவ் விஷயத்தில் விஞ்ஞான ரீதியான கொள்கைகளை வகுத்துக் கொடுக்கக் கூடும் என்ற நம்பிக்கையில் இப்பிரச்னையை அணுகுவதும் ஆபத்தாகும். அரசாங்கத்தின் முக்கியத்வம், அது ஆற்ற வேண்டிய பணியின் அளவு, இதனால் ஏற்படும் கருத்து வேற்றுமைகள், இதை அடிப்படையாகக் கொண்டே பல வேறு வர்க்கங்களின் பரஸ்பரப் போராட்டங்கள் முதலியவற்றை நீங்கள் பகுத்துணர வேண்டுமென்றால், 'அரசாங்கம்' என்ற விஷயத்தை அலசி ஆராய வேண்டும்—ஆழ அறிந்து கொள்ள வேண்டும்.

கூடிய வரையில் இவ்விஷயத்தை நாம் விஞ்ஞானரீதியில் அணுக வேண்டுமென்றால், அரசாங்கத்தின் தோற்றம், அதன் வளர்ச்சியின் வரலாறு முதலிய சரித்திர காலங்களுக்கு நம் கவனத்தைச் சற்று திருப்பவேண்டும். ஒன்றுக்கொன்று முரணான, பலதரப்பட்டகருத்துக்களில் ஒருவன் தன்னையே இழந்து விடாமல், ஒரு விஷயத்தைச் சரியான வழியில் அணுகும் பழக்கத்தை அடைவதற்குச் *சமூக அறிவியல் ஒரு நல்ல மார்க்கம். ஒவ்வொரு விஷயத்தையும் நாம் விஞ்ஞான ரீதியில் ஆராயும்பொழுது முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், "விவாதத்திற்குரிய விஷயம், சரித்திரத்தில் தோன்றியதெப்படி, அதன் வளர்ச்சியின் வரலாற்றில் அது எந்தெந்தநிலைகளைக் கடந்து சென்றிருக்கின்றது, இதன் விளைவாக, அதன்

---

* Social Science

இன்றைய நிலையென்ன? என்ற சரித்திர சம்பந்தமான ஆதாரங்களை மறக்காமல் இருப்பது தான்.

'அரசாங்கம்' என்னும் விஷயத்தைப் பற்றி எங்கல்ஸ் எழுதியுள்ள *"குடும்பத்தின் தோற்றம், தனிச்சொத்துரிமை, அரசாங்கம்" என்ற நூலை நீங்கள் அறிமுகப்படுத்திக்கொள்வீர்கள் என நம்புகிறேன். இது நவீன சோஷலிஸத்தின் சிறந்ததோர் ஆராய்ச்சி நூல். இதில் காணும் ஒவ்வொரு வாக்கியமும் நம்பிக்கையுடன் ஒப்புக்கொள்ளக்கூடியதாகும். ஏனென்றால், நிச்சயமற்ற விஷயங்களைப் புறக்கணித்துச் சரித்திர சம்பந்தமான ஆதாரங்களையும் அரசியல் சம்பந்தமான உண்மைகளையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இந் நூலின் எல்லாப் பகுதிகளும் புரியத்தக்க எளிய நடையில் எழுதப்படவில்லை யென்பது உண்மைதான். வாசகர்கள் ஏற்கனவே பொருளாதாரத்தில் சற்று தெளிவும், அரசியலிலே சற்று ஆர்வமும் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். இதைப் படிக்கும் நண்பர்கள், படித்த மாத்திரத்தில் அது புரியவில்லையே என கலங்க வேண்டாம். எவரும் அப்படிப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் பற்றுதல் மிகுதியால், ஆர்வத்துடன் அதை மீண்டும் படிக்கும் பொழுது, அந் நூல் முழுவதையும் அறிந்து கொள்ள இயலா விடினும், பெரும் பகுதியை யாவது அறிந்து கொள்வதில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். அரசாங்கத்தின் தோற்றம், சரித்திர வடிவமாக இந் நூலில் சித்தரிக்கப் பட்டிருப்பதால்தான் நான் இந் நூலை இங்கு குறிப்பிடுகிறேன்.

முதலாளித்வத்தின் ஆரம்பம், மனிதனை மனிதன் சுரண்டும் பழக்கம், சோஷலிஸத்தின் பிறப்பு, அதன் வளர்ச்சி ஆகியவற்றின் காரணங்கள் யாவை? இத்தகைய விஷயங்களை நாம்

---

* (Origin of the family Private Property and State)

நல்ல முறையிலே ஆராய வேண்டுமென்ருல் அவ் வளர்ச்சியின் வரலாற்று ஏடுகளை நாம் புரட்டிப் பார்க்க வேண்டும்; அது தான் நம்பிக்கையான ஒரே வழி. அரசாங்கம் என்னும் விஷயத்தைப்பற்றி ஆராயும் பொழுது, நம் கவனத்திற்கு வருவது, அரசாங்கம் என்பது ஆதி முதல் இருந்து வருவதல்ல என்பது தான். அரசாங்கமே இல்லாத காலமும் ஒன்று இருந்தது. சுரண்டுவோர் என்றும் சுரண்டப்படுவோர் என்றும் எங்கெல்லாம் சமுதாயம் பிரிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் அரசாங்கமும் தோன்றுகிறது.

## *புராதன கம்யூனிஸ்ட் சமூகம்

மக்கள் குடும்பம் குடும்பங்களாக வாழ்ந்து வந்த புராதன காலத்தில், தந்தை வழிக்குடும்பம் என்ற முறை அனுஷ்டானத்தில் இருந்து வந்தது. அக்காலத்தில் சமுதாயம் வர்க்கங்களாப் பிரிக்கப்படவில்லை. அங்கு எஜமானர்—அடிமையில்லை; சுரண்டுபவர் இல்லை, சுரண்டப்படுபவரும் இல்லை. இப்புராதன காலத்தைப்பற்றியும், இக்கால மக்கள் வாழ்வைப்பற்றியும், நாம் நன்கறிந்துகொள்ள இவர்களால் விட்டுச் செல்லப்பட்ட சில புராதனச் சின்னங்கள் மிகவும் பயனுள்ளவைகளாக இருக்கின்றன. பண்டைக் கலையைப் பற்றிய ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள். புராதன கம்யூனிஸ முறை அக்காலத்தில் இருந்திருப்பதைக்காண்பீர்கள். இதற்குத் தக்க சான்றுகளையும் காண்பீர்கள். ஆம்! அக்காலத்தில் அரசாங்கம் என்று ஒன்று இருந்ததில்லை. மக்களை நிர்ப்பந்தப்படுத்தி பலாத்காரமாகப் பணிய வைப்பதற்கு ஒரு விசேஷ சாதனம்—பயங்கர சாதனம் இருக்கவில்லை. இப் பயங்கர சாதனங்களைத்தான் அரசாங்கம் என்று கூறுகிறோம்.

புராதன சமுதாயத்தில் நாகரீகமற்று, மக்கள் காட்டுமிராண்டிகளாக கூட்டம் கூட்டமாக வாழ்ந்துவந்த காலத்திலே, அர

---

* Pirimitive Communist Society

சாங்கம் என்ற ஒரு சாதனம் இருந்ததாகச் சான்றுகள் எதுவும் இல்லை. சமூகத்தில் பழக்க வழக்கங்கள், மரியாதை, உரிமைகள் முதலியன மிகுந்த முக்கியத்துவம் பெற்று விளங்கின. குடும்பத் தலைவர்களுக்கு விசேஷ அதிகாரங்கள் இருந்துவந்தன. சில சமயங்களில் பெண்களுக்கு இந்த அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். அன்றைய பெண்களின் நிலை இன்றைய பெண்களின் நிலையைப்போல் இருந்ததில்லை. அன்றைய பெண்கள் கொடுமைகளுக்கு ஆளாகவில்லை; தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படவில்லை. ஆனால் ஒரு தனிப்பட்ட கும்பல், மக்களை ஆள்வதற்கென்றே கிளர்ந்து எழும் காட்சியை நாம் எங்கும் காண இயலாது. மக்கள்மேல் ஆட்சி செலுத்துவதற்கென்றே ஓர் பலாத்கார சாதனத்தைக் கையாண்டிருப்பதை நாம் பார்த்தல் அரிது. நிரந்தரமான ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆயுதம் ஏந்தியதைக் காணமுடியாது. இன்று மக்களை அடக்க பலாத்காரத்தைக் கையாளுவதையும், மாபெரும் சேனைகளையும், பெரும் பெரும் சிறைச்சாலைகளையும் பார்க்கிறீர்கள். அன்று காணாதது இன்று காணப்படுகிறது—அவை அரசாங்கத்தின் முதுகெலும்பு எனக் கருதப்படுபவை.

சூதுமதி கொண்ட பூர்ஷ்வா அறிஞர்களால், பிரச்சாரம் செய்யப்படும் கருத்துக்களை—மதபோதனைகளை, தத்துவரீதியான வியாக்கியானங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இந்த சூழ்நிலையிலிருந்து விலகி நின்று அவர்களது உபதேசத்தின் உண்மையான கருத்து என்ன என்று துருவிப்பார்க்கும்பொழுது, அரசாங்கம் என்பது ஆதிக்கம் செலுத்தும் கருவியென்ற உண்மை புலனாகின்றது. அரசு எய்தும் ஆசையைத் தவிர, வேறெதுவும் அறியாத ஒரு கூட்டம் சமுதாயத்திலே தோன்றும்பொழுது, மக்களை அடக்க இராணுவம் தேவைப்படுகிறது; சிறைக்கூடங்கள் தோன்றுகின்றன—அரசாங்கம் தோன்றுகின்றது.

அரசாங்கம் இல்லாத காலமும் ஒன்று இருந்தது என

ஏற்கனவே கூறியிருக்கிறேன். அங்கு எந்த இராஜதந்திரியுமில்லை; மதியூக மந்திரியுமில்லை. பரம்பரைப் பழக்க வழக்கங்களைக் கொண்டு குடும்பத் தலைவர்கள் சமுதாயத்தை நிர்வகித்து வந்தனர்—ஒழுங்கைப் பரிபாலித்து வந்தனர். எங்கு சமுதாயம் முரண்பட்ட வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டதோ, எங்கு ஒரு பகுதியினரின் உழைப்பை மற்றொரு பகுதியினர் நிரந்தரமாகப் பறித்துக்கொள்ள ஆரம்பித்தனரோ, எங்கு சிலர் பலரைச் சுரண்ட ஆரம்பித்தனரோ, அங்குதான் அடக்குமுறை ஆயுதம், அரசாங்கம் என்னும் உருவத்தில் ஆட்சிசெலுத்த ஆரம்பித்தது என வரலாற்றுச் சுவடிகள் சாட்சியம்கூறுகின்றன.

## *அடிமைச் சமூகம்

சமுதாயத்திலே தோன்றிய இந்த வர்க்கப் பிரிவினை சரித்திரத்திலேயே மிக முக்கிய கட்டம் என்பதை நாம் நன்றாக உணர்ந்துகொள்ளவேண்டும். பல்லாண்டுகளாக மனித சமுதாயத்தின் வளர்ச்சி இந்த விஷயத்தைத்தான் தழுவி நிற்கின்றது; ஒரே சீராகத்தான் வளர்ந்து வந்திருக்கின்றது. இதற்கு எந்த நாடும் விதிவிலக்கு இல்லை. எனவே முதன்முதலாகத் தோன்றியது வர்க்கபேதமற்ற சமுதாயம்—அதிகாரவர்க்கமற்ற புராதன சமுதாயம். நாகரீகமான எல்லா ஐரோப்பிய நாடுகளும் இந்த நிலையைக் கடந்து சென்றிருக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் அடிமை ஆட்சி தலைவிரித்தாடியது. இதை அடிமை சகாப்தம் என்றும் கூறுவது உண்டு. உலகிலே உள்ள மக்களில் பெரும் பகுதியினர் இந்த அடிமைத்தனத்திற்கு ஆளாகியிருக்கின்றனர். நாகரீகமற்ற மக்களிடையே இது இன்னும் குடிகொண்டிருக்கிறது. உதாரணமாக ஆப்பிரிக்கா தேசத்திலே நாம் இன்றும்கூட அடிமைகளைப் பார்க்கின்றோம். வர்க்கப் பிரிவினைகளில் எஜமானன் அடிமை

*Serfdom

என்ற பிரிவினை மிக முக்கியமானது—முதன்மையானது. நிலத்திலே மாத்திரம் எஜமானர்கள் உரிமை கொண்டாடவில்லை: கலப்பை, ஏர் போன்ற புராதன உற்பத்திச் சாதனங்களை மட்டும் அவர்கள் சொந்தமாக்கிக்கொள்ளவில்லை. மக்கள் மீதும் அவர்கள் பாத்தியம் கொண்டாடினர்; மனிதர்களை விற்பனைப் பொருளாக மதித்தனர் இவ்விதக் கூட்டம், அடிமைகளை உடைத்தாயிருக்கும் வர்க்கம் என வழங்கலாயிற்று. உடலை உழைப்புக் கருவிகளாக மாற்றிக்கொண்டவர்களும், பிறருக்காக உழைத்து வாழ்ந்தவர்களும் அடிமைகள் என்று பெயர் பெற்றனர்.

## *நிலபிரபுத்வ சமூகம்

காலப்போக்கிலே இந்த சமுதாய அமைப்பில் சிறிய தோர் மாறுதலைச் சரித்திரம் கண்டது. அடிமை சகாப்தம் அழிந்து பண்ணை அடிமைகள் என்ற நியதி அமுலுக்கு வந்தது. ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் அடிமைகளின் வளர்ச்சி பண்ணை அடிமைகளைத் தோற்றுவித்தது. இவ்வண்ணம் சமுதாயத்திலே தோன்றிய இரு புராதன வர்க்கங்களாகிய நிலப்பிரபுக்களும் பண்ணையடிமைகளும் மனித வளர்ச்சியின் வரலாற்றிலே மிக முக்கிய அம்சங்களாகும். ஏனெனில், எஜமானனுக்கும் அடிமைக்கும் இருந்துவந்த உறவுகளில் இது சிறியமாறுதலை ஏற்படுத்தியிருக்கிறது, அடிமை சகாப்தத்தில் அடிமைகள் எஜமானர்களின் சொந்த பொருளாகக் கருதப்பட்டனர், ஆடு மாடுகளைப் போல் அடிமைகளை விலை கூறி வாங்கவும் விற்கவும் சட்ட ரீதியாக எஜமானனுக்கு உரிமையிருந்தது. ஆனால் நிலபிரபுத்வ சகாப்தத்தில் இந்த உரிமை சட்ட ரீதியாக மறுக்கப்பட்டது. பண்ணையடிமையின் நிலை நடைமுறையில் அடிமையின் நிலையைப்போலவே கேவலமாக இருந்தாலும்கூட எவ்விதப் பிரதிப்பிரயோஜன மன்னியில் சில குறிப்பிட்ட வேலை

*Feaudalist Society

களைச் செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டாலும் கூட, நிலப் பிரபுக்களின் சொந்தப் பொருளாகப் பண்ணை அடிமைகள் கருதப்படவில்லை. ரஷ்ய நாட்டிலே பண்ணையடிமை முறை ஏனைய நாடுகளைவிட நீண்ட காலம் வரை கேவலமான நிலையில் நீடித்திருந்ததை நீங்கள் அறிவீர்கள். அடிமை சகாப்தத்தை விட இது எந்த முறையிலும் சிறந்தது என கூறுவதற்கில்லை.

## *முதலாளித்துவ சமூகம்

காலப்போக்கிலே வர்த்தகம் வளர்ச்சியடையந்தகாரணத்தால், உலகெங்குப் மார்க்கட்டுகள் தோன்றி வியாபாரம் சர்வதேச தன்மையைப் பெற்றது. பண நடமாட்டம் அதிகரித்தது. இந்தப் பணப் பெருக்குடன் பணுதிபதிகளும் தோன்றினர். பிரபுத்வ சமுதாயத்தில் முதலாளித்வம் பிறந்தது. **பண்டத்திலிருந்து ***பண்டமாற்றுதலும். பணத்தின் சக்தியும் தோன்றின. மூலதனத்தின் வலிவும் ஓங்கி வளர்ந்தது. பதினெட்டாம் நூற்ருண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்ருண்டின் ஆரம்பத்திலும் உலகெங்கும் புரட்சிகள் தோன்றின. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்கனவே மரணப் படுக்கையிலிருந்த நிலபிரபுத்துவம் மடிந்தது-மறைந்தது. ரஷ்ய நாட்டிலும் கடைசியாக இந்த நிகழ்ச்சி நடந்தேறியது. 1861-ம் ஆண்டு ரஷ்யாவில் ஏற்பட்ட மிகப்பெரிய மாறுதலின் காரணமாக சமுதாயத்திலும் ஓர் மாற்றம் ஏற்பட்டது. நிலபிரபுத்வம் ஒழிந்தது; முதலாளித்வம் தோன்றியது. இப்புதிய அமைப்பிலும் வர்க்க வேற்றுமை மறைந்தபாடில்லை. நிலபிரபுத்வத்தின் மீத மிச்சங்கள் ஆங்காங்கு இருக்கத்தான் செய்தன. ஆனல் சமுதாய அமைப்பு புதியதொரு மாறுதலைக் கண்டது—தோற்றத்திலே புதுமை கொண்டது.

முதலாளித்வ நாடுகள் முழுவதிலும் மிகச் சிறுபான்மையினரே பணுதிபதிகளாகவும், ஆலை முதலாளிகளாகவும், நிலச்

---

*Capitalist Society **Commodity ***Exchange of Commodity

சுவான்தார்களாகவும் இருந்து வந்திருக்கின்றனர். இருந்தும் வருகின்றனர். உழைப்பைவிற்று உணவைத்தேடும் பெரும்பாலான பாட்டாளிகளும், கூழுக்கு உழைக்கும் கூலியாட்களும் வாட்டி வதைக்கப்படுகின்றனர். முதலாளிகள் இவர்கள் உழைப்பின் மீது பூரண ஆதிக்கம் செலுத்துவதால் உழைக்கும் வர்க்கத்தையே ஆட்டிப் படைக்கிறார்கள். கசக்கிப் பிழிகிறார்கள். இவர்களைச் சுரண்டி சுக வாழ்வு நடத்துகிறார்கள். பிரபுத்வம் மறைந்து முதலாளித்துவம் பிறந்ததும், ஏற்கனவே பிரபுத்துவ சகாப்தத்தில் சீர்கெட்டு சிதைவுற்றிருந்த விவசாயிகளில் பலர் பாட்டாளிகளாக மாறினர். வசதி உள்ள சிலர் பணம் படைத்த விவசாயிகளாயினர். நாளடைவிலே பாட்டாளிகளை வேலைக்கமர்த்தி பூர்ஷ்வாக்கள் ஆயினர்.

# அரசாங்கம் ஆளும் வர்க்கத்தின் ஆயுதம்

மனித சமுதாயத்தில் தோன்றிய மூலாதாரப் பிரிவினைகளை அடிப்படையாகக்கொண்டு ஆட்சி முறைகளை நீங்கள் ஆராய்ந்து பார்ப்பீர்களானால், சமூகத்தில் வர்க்கங்கள் தோன்றுவதற்கு முன், எந்த அரசாங்கமும் இருந்தது இல்லையென அறிந்துகொள்வீர்கள். ஆனால் சமூகத்தில் வர்க்க வேற்றுமைகள் வளர்ந்து வலுப்பெற ஆரம்பித்ததும் அரசாங்கம் தோன்றி திறம்பட வளர்ந்தது. அடிமை முறை, நிலபிரபுத்வம், முதலாளித்வம் ஆகிய முப்பெரும் சகாப்தங்களை நூற்றுக்கணக்கான நாடுகள் கடந்து சென்றிருக்கின்றன என்பது மனித வரலாறு கண்ட மாபெரும் உண்மை. இந்த ஒவ்வொரு நாட்டிலும் மனித சமுதாயம் படிப்படியாக முன்னேறி முதலாளித்வத்தையெதிர்த்து அகில உலக போராட்டம் நடத்தும் கட்டத்தையடைந்திருக்கிறது. இவ்வளர்ச்சியின் வரலாற்றிலே எண்ணற்ற மாறுதல்கள் இடம் பெற்றன. அரசியல் மாற்றங்கள் தோன்றியிருக்கின்றன: புரட்சிகள் பல பொங்கியிருக்

கின்றன. ஆயினும் இங்ஙிலையற்ற நிகழ்ச்சிகளுக்கு இடையே அரசாங்கத்தின் எழுச்சியை நீங்கள் தெளிவாகக் காண முடியும். அது சமூகத்திலிருந்து விலகிச் சென்ற ஓர் சாதனமாக இருந்திருக்கிறது. இத்தகைய சாதனம் ஆளுவதையே அதன் ஒரே எண்ணமாகக் கொண்ட ஒருசாராரை தன்னுட்கொண்டிருந்தது ஆளும் நிபுணத்வம் படைத்தவரென்றும், ஆளப்படுபவரென்றும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். சமூகத்திலே செல்வாக்குப் பெற்றவர்கள் ஆளும் வர்க்கத்தினர் எனவும்' அரசாங்கத்தின் பிரதிநிதிகள் எனவும் அழைக்கப்படுகிறார்கள். மக்கள் மீது ஆட்சி செலுத்தும் இந்த அதிகார வர்க்தினர் பலாத்காரத்திலே பாத்தியம் கொண்டாடுகின்றனர் புராதன காலத்துத் தண்டமாயினும்சரி, அடிமை சகாப்தத்தின் திருந்திய தளவாடமாயினும்சரி, அல்லது மத்திய காலத்தில் தோன்றிய தோட்டா, துப்பாக்கிகளாயினும்சரி, அல்லது 20-ம் நூற்றுண்டின் தொழில் நுணுக்கத்தின் அதிசயங்கள் எனக் கருதப்படும் நவீன ஆயுதங்களாயினும்சரி,—இவையனைத்தும் ஆளும் வர்க்கத்தினருக்குப் பக்க பலமாகவும், மக்கள் நல் வாழ்வைக்குலைத்த நாசகாரிகளாகவும் இருந்துவந்திருக்கின்றன காலத்திற்கேற்றவாறு பலாத்கார முறைகளிலும் மாறுதல்கள் தோன்றின. ஆனுல் எப்பொழுது ஆட்சி முறை அமுலுக்கு வந்ததோ, ஆளும் வர்க்கத்தினரும் கூடவேதோன்றியிருக்கின்றனர். இவ்வாறு கைப்பற்றிய அதிகாரத்தைக் காப்பதற்கு பலாத்கார சாதனங்களைக் கையாண்டுள்ளனர். அடக்குமுறையால் மக்களை அடக்கி ஆண்டனர். எனவே அரசாங்கத்தின் மூலாதாரம் என்ன, அதன் முக்கியத்வம் என்ன என்ற கேள்விகளுக்குச் சரியான விடைகாண வேண்டுமாயின் மேற்சொன்ன பொதுவான விஷயங்களை நாம் ஆராய்ந்தறிவதோடு நம்மை நாமே ஒரு கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டும். அதாவது சுரண்டுவோர் சுரண்டப்படுவோர் என்ற நியதி

ஏற்படாத காலத்தில் —வர்க்கங்கள் தோன்றாத காலத்தில் அரசாங்கம் தோன்றாததேன்? வர்க்கங்கள் தோன்றியதும் அரசாங்கம் தோன்றியதேன்?

**ஒரு வர்க்கத்தவரின் அதிகாரம் மற்றொரு வர்க்கத்தினரின் மீது நீடித்திருக்கத் துணை புரியும் ஓர் சாதனமே அரசாங்கம் எனப்படுவது.**

வர்க்கபேதம் சமூகத்தில் இடம் பெறுவதற்கு முன்னர்— அடிமை சகாப்தம் ஆரம்பமாவதற்கு முன்னர், மக்கள் சமத்துவ ரீதியில் உழைத்துவந்தனர். இப் புராதன நிலையில் உழைப்பின் உற்பத்தி சக்தி மிகவும் குறைந்த அளவில் இருந்தது. இக் காலத்து மனிதன் தன் தேவைக்கு வேண்டிய உணவை மாத்திரம் உற்பத்தி செய்தான். சமுதாயத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு மற்றவர்களை ஆட்டிப்படைக்க ஒரு வர்க்கம் தோன்றவில்லை; தோன்றவும் முடியவில்லை. சமுதாயத்தில் வர்க்கபேதம் இடம் பெற்றபின்—அடிமை முறை அமுலுக்கு வந்த பின்னர், சில சுயநலமிகள் பக்குவமற்ற விவசாய உழைப்பினை ஒருமுகப்படுத்தி, மிகுதியான தானியத்தை உற்பத்தி செய்யலாயினர். அடிமைகளின் வாழ்விற்கு மிகுதியான தானியம் அத்தியாவசியமில்லாத காரணத்தால், எஜமானர்களின் களஞ்சியங்களில் நிரப்பப்பட்டன. இவ்வாறு எஜமானர்களின் செல்வாக்கு அதிகரித்தது. **அதிகாரத்திற்கு அஸ்திவாரமாக அரசாங்கத்தின் தோற்றம் அவசியமாயிற்று.**

# பல்வேறு அரசாங்கங்கள்

அரசாங்கமும் தோன்றியது. அடிமைகளையும், எஜமானர்களின் எதேச்சாதிகாரத்தையும் கொண்ட அரசாங்கம் தோன்றியது. சர்க்காரும் சமுதாயமும் இன்றைய நிலையைவிட அன்று

மிகச் சிறிய அளவிலேயே இருந்தன. அன்றைய போக்குவரத்து சாதனங்கள் மிகக் கேவலமான நிலையிலிருந்தன. இன்றைய நவீன சாதனங்கள் அன்று இருந்ததில்லை. மாபெரும் மலைகளும் அலைபுரளும் கடல்களும், புரண்டோடும் நதிகளும் அன்று நீக்க முடியாத முட்டுக்கட்டைகள். எனவே அரசாங்கத்தின் அமைப்பு குறுகிய பூகோள வரம்பிற்கு அடங்கியதாகஇருந்தது. விஞ்ஞான வளர்ச்சியற்ற அரசாங்கம் ஒரு வரம்பிற்கு உட்பட்டுத்தானே செயலாற்ற முடியும். ஆயினும் மக்களை அடிமைத் தனத்திற்குள்ளாக்கும் ஒரு சாதனம் இருக்கத்தான் செய்தது. சமுதாயத்தின் ஒரு பகுதியினர் அடிபணிந்துகிடக்க, மற்றொரு பகுதியினர் கொடுங்கோல் புரியும்படியான நியதி இருக்கத்தான் செய்தது. பெருவாரியான மக்களை, ஒரு வர்க்கத்தாரின் நலனுக்காகப் பாடுபடும்படி நிர்ப்பந்தப்படுத்துவதென்றால், ஒரு நிலையான பலாத்கார சாதனமன்னியில் முடியாதல்லவா? வர்க்க வேற்றுமைகள் தோன்றுவதற்குமுன் அடக்குமுறையும் தோன்றவில்லை. சமுதாயத்தில் வர்க்கவேற்றுமை இடம்பெற்று எங்கெங்கு வளர ஆரம்பித்தனவோ, அங்கெல்லாம் ஓர் விசேஷ அதிகாரம் என்ற பெயருடன் அரசாங்கமும் துவங்கிற்று. அரசாங்க அமைப்புகளில் பல வகையுண்டு. நாகரீக வளர்ச்சிக்கேற்றவாறு ஆட்சி முறைகளும் மாறுகின்றன. அடிமை சகாப்தத்தில் கல்வி, கலை, நாகரீகம் ஆகியவை வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசாங்கத்தின் அமைப்பு அந்தந்த கால நிலைக்கேற்றவாறு மாறுபட்டிருப்பதை நாம் காண்கிறோம். அடிமைகள் மலிந்துகிடந்த பண்டைய கிரேக்க நாடும், ரோம ராஜ்யமும் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். குடியரசுக்கும் முடியரசுக்கும் உள்ள வேற்றுமைகள் அக்காலத்திலேயே பிறந்துவிட்டன. ஜனநாயகத்திற்கு முரணானது கோமான்களின் ஆட்சியென்பதை குடிமக்கள் உணர்ந்துவிட்டனர். ஒரு தனிப்பட்ட மனிதனின் எதேச்சாதிகாரம்தான் முடியாட்சியெனப்படுவது

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சியைக் குடியரசு எனக் கூறுகிறோம்.

சிறுபான்மையான செல்வந்தர்கள் நடத்தும் அரசாங்கம் கோமான்களின் ஆட்சியெனப்படும். ஜனநாயகம் எனப்படுவது மக்களின் சக்தியே. இவ்வேற்றுவைகள் யாவும் அடிமை சகாப் தத்திலேயே தோன்றிவிட்டன. எது எவ்வாறு இருப்பினும் அடிமை சாகாப்தத்தின் ஆட்சிமுறைகளைக்கொண்ட நாடாகத்தானே இருக்கமுடியும்—அது முடியாட்சியாயிருந்தா லென்ன, குடியாட்சியாயிருந்தாலென்ன? அல்லது ஜன நாயகமாகவே இருந்தால்தான் என்ன?

## அரசாங்கத்தின் வளர்ச்சி

பண்டைக்கால சரித்திரத்தைப் பற்றி நிகழ்த்தப்படும் பிர சங்கத்தின் ஒவ்வொரு கட்டத்திலும், குடியரசுகளுக்கும் முடிய ரசுகளுக்கும் இடையே நடைபெற்றிருக்கும் போராட்டங்களை நீங்கள் கேட்கிறீர்கள், ஆனால் இதன் மூலாதாரஉண்மை என்ன வென்றால் அடிமைகள் இதில் சம்பந்தப்பட்ட வர்களாகக் கருதப்படவில்லை. அவர்கள் பிரஜைகளாகக் கருதப்படாதது மட்டுமல்ல, மனிதர்களாகக்கூட கருதப்படவில்லை. ரோம் ராஜ் யத்தின் சட்டப்படி அவர்கள் ஆடுமாடுகளாகக் கருதப்பட்ட னர். கொலைக்குற்றங்களை எதிர்த்து வழக்காடும் உரிமைகள் கூட அடிமைகளுக்கு வழங்கப்படவில்லையென்றால் ஏனைய பாது காப்பு சட்டங்களைப்பற்றி கேட்கவும் வேண்டுமா? சட்டங்கள் பிரபுக்களின் பாதுகாவலர்களாக விளங்கின. சீமான்கள் சகல பிரஜா உரிமைகளையும் பெற்றவர்களாக வாழ்ந்தனர். ஆனால் நடைமுறையில் எத்தகைய ஆட்சியிருந்தபோதிலும்,[ அதுமுடி யாட்சியாயினும் சரி, குடியாட்சியாயினும்சரி] அது அடிமை களைத் கொண்ட முடியாட்சியாகவோ, அல்லது அடிமைகளைக்

கொண்ட குடியாட்சியாகவோ இருந்துவந்தது. சகல உரிமைகளும் எஜமானர்களின் ஏகபோக சொத்தாக கருதப்பட்டது ஆனால் அடிமைகள் விலங்காகக் கருதப்பட்டனர் அடிமைகளைக் கொலை செய்வது குற்றமாகக் கருதப்படவில்லையென்றால் அவர்களை இம்சிப்பது சர்வசாதாரணமான விஷயமாகத் தானே கொள்ளவேண்டும். அடிமைகளைக் கொண்ட குடியரசு முறையின் அந்தரங்க அமைப்புகளில் பல வித்தியாசங்கள் இருந்தன. கோமான்களின் குடியரசு என்றும் ஜனநாயக குடியரசு என்றும் இரு வகை ஆட்சி முறைகள் உண்டு. கோமான்களின் குடியரசில் சலுகை பெற்ற செல்வந்தர்கள் சிலரே தேர்தலில் பங்கெடுத்துக் கொண்டனர். ஜனநாயகக் குடியரசிலோ பொதுவாக எல்லோரும் பங்கெடுத்துக்கொண்டனர். ஆனால் இவர்கள் அடிமைகளைச் சொந்தமாக்கிக்கொண்டிருந்த சீமான்களே தவிர, அடிமைகள் பங்கெடுத்துக்கொள்ளவில்லை; அவர்களுக்கு இந்த உரிமையுமில்லை. இந்த மூலாதார உண்மையை நாம் மனதிலே பதித்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், 'அரசாங்கம்' என்னும் விஷயத்தைப் பற்றியும் அதன் இயற்கையான தன்மையைப் பற்றியும் இது மிகத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

ஒரு வகுப்பினரை மற்றொரு வகுப்பினர் ஒடுக்கி ஆள—தாழ்த்தப்பட்ட மக்களை உயர்தர வகுப்பினர் பணிய வைக்கப் பயன்படும் இயந்திரமே அரசாங்கம். இத்தகு இயந்திரங்களில் பலவகையுண்டு. அடிமை முறையை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறைகளில் முடியாட்சி நிலவிவந்ததைக்கண்டோம். சீமான்களால் நடத்தப்பட்ட குடியரசைக் கண்டோம். உண்மையில் அரசியல் முறைகள் இடையறாது மாறிக்கொண்டிருந்தாலும் அடிமைகளின் வாழ்வை அவை மாற்றியமைக்கவில்லை. உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவும், வாட்டி வதைக்கப் பட்டவர்களாகவும் அடிமைகள் வாழ்ந்தனர்—மனிதர்களாக

கருதப்படவில்லை. நிலபிரபுத்துவ முறையிலும் இதேகொடுமை களை நாம் காண்கிறோம்.

சுரண்டல் முறையில் ஏற்பட்ட மாற்றம் சமுதாய அமைப் பிலும் ஒரு மாறுதலை ஏற்படுத்தியது. அடிமைமுறை அழிந் தொழிந்து,நிலபிரபுத்வ முறை பிறந்தது. இம்மாற்றம் பெரும் முக்கியத்வம் உடையது. அடிமைச் சமுதாயத்தில், அடிமை எவ்வித உரிமையையும் அனுபவிக்கவில்லை; மனித னுகக்கூட கருதப்படவில்லை. நிலப்பிரபுந்துவ முறையில், பண்ணையடிமை நிலத்தோடு பிணைக்கப்பட்டுக்கிடந்தான். அக்காலத்தில் விவசாயிகள் பெரும்பான்மையினர்; உயர்ந்த நகரவாசிகள் மிகமிகச்சொற்பம். விவசாயிகள் நிலத்துடன் பிணைக்கப்பட்டவர்கள் என்று கருதப்பட்டதுதான், அடிமைத் தனத்தின் முக்கியமான சின்னம். ஆகவே தான் (பண்ணை) அடி மைத்தனம் என்ற கருத்தும் எழுந்தது. நிலபிரபுவால் ஒதுக்கப் கப்பட்ட நிலத்தில் இந்த விவசாயிகள் குறிப்பிட்ட நாட்கள் தனக்காக வேலை செய்யவேண்டும். மற்ற நாட்களில் இந்த அடிமை தன் நிலபிரபுவிற்காக உழைத்தான். வர்க்கபேதமுள்ள சமுதாயத்தின் முக்கியமான சாரம் நிலைத்து நின்றது. சமுதா யம் சுரண்டலைத்தான் அடிப்படையாகக்கொண்டிருந்தது. நிலப்பிரபுக்கள் மாத்திரம்தான் சகல உரிமைகளையும் அனுப விக்கமுடிந்தது. விவசாயிகளுக்கு உரிமைகள் துளியும் கிடை யாது. நடைமுறையில், அடிமை சகாப்தத்தில் வாழ்ந்த அடி மையின் நிலையும் இவர்களது நிலையும் சிறிதளவு தான் மாறு பட்டிருந்தது. ஆயினும் விவசாயிகளின் விடுதலைக்கான விரிந்த பாதை திறக்கப்பட்டது. ஏனென்றால் பண்ணையடிமை, நிலப் பிரபுவின் சொந்த சொத்தாகக் கருதப்படவில்லை. தன் சொந்த நிலத்தில் தனக்காகச் சிறிதளவு நேரந்தான் வேலை செய்ய முடிந்தது. உண்மையில் அவன் ஒரு குறிப்பிட்ட அளவுதான் தனக்கு உரிமையானவன். வர்த்தக உறவுகளின் வளர்ச்சிக்கு

பரந்தவாய்ப்புகள் தோன்றின; அவற்றுடன் நிலபிரபுத்வமுறை படிப் படியாக சீர்குலைந்து விவசாயிகளின் விடுதலைப்பாதை மெதுமெதுவாக விரியலாயிற்று. அடிமைசமுதாயத்தைவிட பிர புத்வ சமுதாயம் மிகவும் சிக்கலானது. தொழில் அபிவிருத்திக் கும் வர்த்தக வளர்ச்சிக்கும் வேண்டிய அம்சங்கள் நிறைய இருந்தன. தொழிலும், வாணிபமும் அந்நாட்களில்கூட முத லாளித்வத்தை நோக்கி நடந்தன. மத்திய காலங்களில் நிலபிர புத்வ முறை ஆதிக்கம் செலுத்தியது. இக்காலத்தில் கூட ஆட்சி முறைகளின் அமைப்பில் மாற்றங்கள் இருந்தன. முடி யரசையும் குடியரசையும் இங்கு காண்கிறோம். குடியரசைப் பற்றி மிகவும் தயக்கத்துடன்தான் வெளியிடப்பட்டது. ஆனால் நிலப்பிரபு எப்பொழுதும் ஏகச்சக்கரவர்த்தியாகக் கருதப்பட் டான். அரசியல் உரிமைகள் அடிமை விவசாயிகளுக்குப் பரி பூரணமாக மறுக்கப்பட்டன.

## வர்க்கப் போராட்டங்கள்

அடிமைசகாப்தத்திலும் நில பிரபுத்வசகாப்தத்திலும் ஆட்சி புரிந்த சிறுபான்மையினரான ஆளும் பரம்பரையினர் பலாத் காரத்தைப்பயன்படுத்தாமல் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. இத்தகைய கொடுமைகளைத் தகர்த்தெறிய இன்னலுற்ற மக் கள் எடுத்த இடையறாத முயற்சிகள் சரித்திர முழுவதும் காணப்படுகின்றன. அடிமைத்தனம் என்னும் சிறையிலே சிக்கியவர்கள், அதன் கம்பிகளைத் தூளாக்க வருடக்கணக் காக நடத்திய போராட்டங்கள் அடிமை சரித்திரத்திலே இடம் பெற்றிருக்கின்றன. ஜெர்மன் கம்யூனிஸ்ட்கள் ஸ்டார்ட் டாஸிஸ்ட் என்ற பெயரை தற்செயலாக சூட்டிக்கொண்டனர். முதலாளித்வத்தை வன்மையாகவே எதிர்த்துப்போராடும் ஜெர்மனியக்கட்சி இது ஒன்றுதான். இரண்டாயிரம் ஆண்டு களுக்குமுன் மிகப்பெரிய அடிமைப் புரட்சிகளைத் தலைமை

தாங்கி நடத்திய ஒப்பற்ற வீரர்களில் ஸ்பார்ட்டகஸ் என்பவரும் ஒருவர். அடிமை சகாப்தத்தின் கேந்திரமாகக் கருதப்பட்ட சர்வ வல்லமை பொருந்திய ரோம் சாம்ராஜ்யம் அடிமைகளின் கிளர்ச்சியால் அதிர்ச்சியடைந்தது. ஸ்பார்ட்டகஸின் தலைமையில் அடிமைகள் ஒன்றுபட்டு ஆயுதம் தாங்கிய சேனையாக மாறினர். இறுதியில் அடிமைகள் தோற்றனர்; சிறை பிடிக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாயினர். வர்க்க வேற்றுமை நிறைந்த சமுதாயத்தின் சரித்திரமுழுவதுமே இத்தகைய உள் நாட்டுப் போராட்டங்கள்தான். அடிமைச் சகாப்தத்தில் நடைபெற்ற உள்நாட்டுக் கலகங்களில் சிறந்த தொன்றை நான் இங்கு உதாரணமாகக் குறிப்பிட்டேன். இதைப்போலவே பிரபுத்வ சகாப்தம் முழுவதிலும் பண்ணையடிமைகளின் இடையருத கிளர்ச்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. உதாரணமாக ஜெர்மன் நாட்டில், மத்திய காலத்திலே அடிமை விவசாயிகளுக்கும், நிலப் பிரபுக்களுக்கும் இடையே நடைபெற்று வந்த போராட்டம் முற்றி. இறுதியிலே ஒரு கொடிய உள் நாட்டு யுத்தமாக மாறியது. ரஷ்ய நாட்டில் நிலப்பிரபுக்களை எதிர்த்துப் பண்ணையாட்கள் தொடர்ந்து நடத்திய போராட்டங்கள் உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே.

தங்கள் நிர்வாகத்தை நிலைநாட்டவும், ஆதிக்கத்தைப் பேணிக்காக்கவும், நிலபிரபுக்களுக்கு ஒரு சாதனம் தேவைப்பட்டது. அச்சாதனத்தின் துணையால், மக்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, சில சட்டதிட்டங்களுக்குப் பணிந்து நடக்கும்படி செய்தனர். இந்த சட்டங்கள் அனைத்தும் அடிப்படையில் ஒன்றைத்தான் குறிப்பிட்டது; அடிமை விவசாயிகளின்மீது நிலபிரபுக்களின் ஆட்சி நிலைத்து நிற்கவேண்டும் என்பதுதான் அது. இது நிலபிரபுத்வ ஆட்சி முறை. இன்று நிலபிரபுத்வமுறை நிலைத்திருக்கும் பிற்போக்கான ஆசிய நாடுகளிலோ, அல்லது ரஷ்யநாட்டிலோ இந்த நிலபிரபுத்வ ஆட்சிமுறை குடியரசா

கவோ முடியரசாகவோ இருந்திருக்கிறது. தோற்றத்தில்தான் மாறுபாடுகள் இருந்தன. முடியரசு இருந்தபொழுது தனிமனிதனின் ஆட்சி அங்கீகரிக்கப்பட்டது. அது குடியரசாக மாறும் பொழுது நிலபிரபுத்வ சமுதாயத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசியல் பொறுப்புகளில் ஓரளவு கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். இது நிலபிரபுத்வ சமுதாயத்தின் நியதி. நிலத்தைச் சொந்தமாகக்கொண்டிருந்த மிகச் சிறுபான்மையினரான நிலபிரபுக்களிடம் பெரும்பான்மையினரான பண்ணையாட்கள் அடிமைப்பட்டுக்கிடக்கும் வர்க்கப் பிரிவினையை எடுத்துக் காட்டுவதே நிலபிரபுத்வ சமுதாயம்.

## முதலாளித்துவ அரசாங்கமும் ஜனநாயகமும்

வர்க்கத்தின் வளர்ச்சியும், பண்டமாற்றுதலின் வளர்ச்சியும் ஓர் புதிய வர்க்கத்தை—முதலாளி வர்க்கத்தை உருவாக்கியது. மத்திய காலத்தின் இறுதியில் அமெரிக்கா தேசம் கண்டுபிடிக்கப்பட்ட பின் வர்த்தகம் சர்வதேச ரீதியில் வாயு வேகத்தில் வளர்ச்சியடைந்தது. தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள் அதிகமான அளவு கிடைத்தமையால் தங்கமும் வெள்ளியும் பரிவர்த்தனைச் சாதனமாக மாறின. நாணய நடமாட்டத்தில் தனிப்பட்ட மனிதர்கள் வேண்டிய அளவு சேமித்துவைக்க முடிந்தது; மூலதனத்தின் செல்வாக்கு அதிகரித்தது. தங்கமும் வெள்ளியும் உலக முழுவதும் செல்வமாக அங்கீகரிக்கப்பட்டது. நிலப்பிரபுக்களின் பொருளாதார நிலைகுலைந்து ஓர் புதிய வர்க்கத்தாரின்—மூலதனத்தின் பிரதிநிதிகளின்—சக்தி வளர்ந்தது. பிரஜைகள் யாவரும் சமமானவர்கள் என்ற மனோபாவத்தில் சமுதாயம் ஓர் புனர்நிர்மாணம் பெற்றது. அடிமை—எஜமானன் என்ற பழைய பிரிவினை மறைந்து, சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்று கருதப்பட்டனர். நிலத்தை சொந்தச்

சொத்தாக ஒருவன் வைத்திருப்பினும் சரி, அல்லது உழைப்பைத் தவிர வேறெதுவும் இல்லாது பசியால் வாடுபவனும் சரி, சட்டத்தின் முன் சமமானவர்களே. ஒவ்வொருவரையும் சட்டம் சமமாகப் பாதுகாத்து வருகிறது. உழைக்கும் சக்தியைத் தவிர' சொந்த சொத்து எதுவும் இன்றி வாழ்ந்த மக்கள் படிப்படியாக வறுமைப் படுகுழிக்கு இழுத்துச் செல்லப்பட்டு, இறுதியில் பாட்டாளிகளாக மாறினர். தனி ஒருவனின் சொத்தை இத்தகைய மக்கள் தாக்கா வண்ணம் சட்டம் காவல் புரிந்து வருகிறது. இதுதான் முதலாளித்துவ சமுதாயம்.

இதைப் பற்றி நான் விரிவாகப் பேசவிரும்பவில்லை. கட்சியின் திட்டத்தைப் பற்றி விவாதிக்கும்பொழுது, முதலாளித்வ சமுதாயத்தைப் பற்றிய தெளிவான விளக்கத்தை நீங்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும். இச் சமுதாயம் விடுதலைக் கோஷங்களை எழுப்பிக்கொண்டே, அடிமைத்தனத்தையும் பழைய பிரபுத்வ முறையையும் எதிர்த்துவிரைவாக முன்னேறிச் சென்றது. ஆனால் உண்மையில் திரண்ட செல்வம்உடையவர்களே விடுதலையடைந்தார்கள். பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் துவக்கத்திலும் நிலபிரபுத்வ முறை தூள்தூளாக்கப்பட்டபொழுது, நில பிரபுத்துவ ஆதிக்கத்தை வீழ்த்திவிட்டு முதலாளித்வ ஆதிக்கம் ஆக்கிரமித்துக்கொண்டது. ரஷ்யாவில் இந்நிகழ்ச்சி 1851-ல் ஏற்பட்டது. மக்களின் விடுதலையே தனது இலட்சியம் என்ற கோஷத்தை எழுப்பியது முதலாளித்துவ சமுதாயம். மேலும் இந்த சமுதாயம் மக்களின் எண்ணத்தைப் பிரதிபலித்தது. எனவேதான் மக்கள் விடுதலைக்காகப் போராடி வரும் சோஷலிஸ்ட்களுக்கும், முதலாளித்வ ஆதிக்கத்திற்கும் ஒரு போராட்டம் பெருகிப்படர்ந்தது. இப்போராட்டம் தான் இறுதியில் சோவியத் ஜனநாயகக் குடியரசின் பிறப்பிற்கு வழி வகுத்தது. அந்தக்குடியரசு அகில உலகையும் அணைத்துவருகிறது.

உலக மூலதனத்தை எதிர்த்து துவக்கப்பட்டிருக்கும் மாபெரும் போராட்டத்தைப் பற்றித் தெளிவுற அறிந்து கொள்ளவேண்டுமென்றால்—முதலாளித்வ ஆட்சிமுறையின் ஜீவ நாடியைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், நிலபிரபுத்வ முறையை எதிர்த்துப்போராடிய முதலாளி வர்க்கம் 'சுதந்திரம்' என்ற இலட்சியத்தை முன்னிறுத்தித்தான் போராடியது என்பதை நாம் நன்குணர வேண்டும். நிலபிரபுத்வ முறை அழிந்தது என்றால், முதலாளித்வ ஆட்சியின் பிரதிநிதிகளுக்குச் சுதந்திரம் கிட்டியது, அவர்கள் எண்ணம் ஈடேறியது என்றுதான் பொருள். நில பிரபுத்வம் சீர்குலையவே விவசாயிகள் நஷ்டஈடாக நிலங்களை விலைக்கு வாங்கி தமது சொந்த சொத்தாக மாற்றிக்கொள்ளும் வாய்ப்புப் பெற்றனர். அரசாங்கம் இதில் சம்பந்தப்படவில்லை. சொத்தைப் பாதுகாக்கும் பொறுப்பைத்தான் உணர்ந்திருந்ததே தவிர, சொத்து எவ்விதம் வந்தது என்பதைப்பற்றி அரசாங்கம் சிறிதேனும் கவலை கொள்ளவில்லை. ஏனென்றால் தனி உரிமையை அஸ்திவாரமாகக் கொண்டுதான் இவ்வரசாங்கம் அமைக்கப்பட்டு இருந்தது. எல்லா நாகரீக நாடுகளிலும் விவசாயிகள் தனி உடமை பெற்றனர். நிலப்பிரபு தன் நிலத்தின் ஒரு பகுதியை விவசாயிக்கு அளித்தபோதிலும், அரசாங்கம் நிலப்பிரபுவுக்கு நஷ்டஈடு கொடுத்து சொத்துரிமையைப் பாதுகாத்தது. பரிபூரணமாக சொத்துரிமை பாதுகாக்கப்படும் என்று அரசாங்கம் பிரகடனம் செய்தது. அதற்குவேண்டிய பாதுகாப்பும் உதவியும் அளித்தது. வர்த்தகர்கள், தொழில் அதிபர்கள், உற்பத்தியாளர்கள் ஆகிய ஒவ்வொருவரின் சொத்துரிமைகளை அரசாங்கம் அங்கீகரித்தது. மூலதனத்தின் சக்தியையும் தனி உடமையையும் அடிப்படையாகக்கொண்ட இச்சமுதாயம்—பணமற்ற ஏழை பாட்டாளி மக்களையும், விவசாயி மக்களையும் அடிமைத்தனத்திற்குள்ளாக்கிக்கொண்ட சமுதாயம், தனது ஆட்சி பூரண விடுதலையை அடிப்படையாகக்கொண்டுள்ளது எனத்

துணிந்து கூறியது. நிலபிரபுத்வத்தை எதிர்த்து போராடி சொத்துரிமையை நிலைநாட்டியது எனவும், குறிப்பாகத்தான் ஒரு வர்க்கபேதமற்ற அரசாங்கம் எனவும் கூறிக்கொள்வதிலே இது பெருமைப்பட்டது.

ஆயினும் விவசாயி—தொழிலாளி வர்க்கம் முதலாளிகளின் பிடியில் சிக்கி வதைபட, அரசாங்கம் ஒரு துணைக் கருவியாக இருந்துவந்தது. ஆனால் வெளிப்படையில் அது களங்கமற்ற தோற்றத்துடன் விளங்கியது. பொதுஜன வாக்குரிமையளித்தது. மேலும் நிபுணர், அறிஞர், ஞானிகள் ஆகியோரைக் கொண்டுதான்ஒரு வர்க்கபேதமற்ற அரசாங்கம் என பிரஸ்தாபப்படுத்தியது. இப்பொழுதுகூட, சோவியத் ஜனநாயகக் குடியரசுகள் முதலாளித்வத்தை எதிர்த்து போராடத் துவங்கிய நேதிரத்லும்கூட, சுதந்திரத்தைப் புறக்கணிப்பவர் என நம்மை ஏசுகிறுர்கள். பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி அமைக்கும் கட்சியினர் எனப் பேசுகிறுர்கள். சிலரைப் பலர் அடக்கியாளும் ஆட்சி முறையைப் நாம் விரும்புகிறவர்கள் என்றும் ஆனல், அவர்கள் மாத்திரம் ஜனநாயக ஆட்சி முறையைப் பிரதி பலிப்பவர் என்றும் நம்மை குற்றம் சாட்டி வருகிறுர்கள். சோஷலிஸ்ட் புரட்சி சர்வதேச ரீதியில் ஆரம்பிக்கப்பட்டு, சிற்சில நாடுகளில் அது வெற்றி கண்டவுடனே அரசாங்கம் எனற பிரச்னை பெரும் முக்கியத்வம் பெற்றுவிட்டது; தற்கால அரசியல் பிரச்னைகளின் அரசாங்க அலுவல்களின் கேந்திரமாக மாறிவிட்டது.

## எது ஜனநாயகம்?

ரஷ்யாவில் உள்ள எந்தக் கட்சியை நாம் எடுத்துக்கொண்டாலும் சரி, அல்லது நாகரீக வளர்ச்சிபெற்ற ஒரு நாட்

டின் கட்சியை எடுத்து ஆராய்ந்தாலும்சரி, ஏறக்குறைய எல்லா அரசியல் விவகாரங்களும், அபிப்பிராயங்களும், கருத்து வேற்றுமைகளும் அரசாங்கம் என்ற கருத்தினைத்தான் சுற்றிச் சுற்றி வருகின்றன. முதலாளித்துவ நாடுகளிலேனும் அல்லது அமெரிக்கா, சுவிட்ஸர்லாந்துபோன்ற ஜனநாயகக் குடியரசு நாடுகளிலேனும் ஆட்சி முறை மக்களின் உள்ளத்தைப் பிரதிபலிக்கின்றதா? மக்களின் கூட்டான அபிப்பிராயத்தைக் காட்டுகின்றதா? அல்லது ஒரு நாட்டின் ஏழை விவசாயிகளின் மீதும், ஆலைத் தொழிலாளர்களின் மீதும் முதலாளிகள் ஆதிக்கம் செலுத்துவதற்கு அரசாங்கம் ஒரு சாதனமா? இதுதான் பிரச்னை! இது அகில உலகிலும் உள்ள அரசியல் விவகாரங்களுக்கு இலக்காயிருக்கும் மூலாதாரப் பிரச்னை. போல்ஷ்விஸத்தைப் பற்றி அவர்கள் கூறுவதென்ன? பூர்ஷுவா பத்திரிகைகள் போல்ஷ்விக்குகளை இழித்துப் பேசுகின்றன. மக்கள் ஆட்சியை மீறுகிறவர்கள் போல்ஷ்விக்குகள் என்ற அபாண்டமான குற்றச்சாட்டைத் தொடர்ச்சியாக வெளியிடாத எந்தச் செய்தித்தாளையும் நீங்கள் காண முடியாது. போல்ஷ்விக்குகள் மக்கள் ஆட்சியையும், சுதந்திரத்தையும் புறக்கணிப்பவர்கள் என்ற குற்றச் சாட்டைக் கண்டு பிடித்துவிட்டதாக மென்ஷ்விக்குகளும், சோஷலிஸ, முற்போக்குவாதிகளும் கருதுவார்களானல் உள்ளபடியே அவர்கள் பரிகசிக்கத்தக்க குற்றத்தைப் புரிந்தவராவர். இன்று செல்வம் கொழிக்கும் சகல நாட்டிலும் உள்ள செய்தி ஸ்தாபனங்கள் கோடிக்கணக்கான பிரதிகளில் ஏகாதிபத்திய ஆட்சி முறையையும், பூர்ஷுவா வர்க்கத்தையும் ஆதரித்துப் பொய்ப்பிரசாரம் செய்வதற்குக் கோடி கோடியாக வாரியிறைக்கின்றன. போல்ஷ்விஸத்தை எதிர்த்து குற்றம் சாட்டாத எந்தச் செய்தித்தாளும் கிடையாது. சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடு

கள் மக்கள் ஆட்சியை அடிப்படையாகக்கொண்டது என்றும், ஆனால் போல்ஷ்விக் குடியரசு என்பது சுதந்திரம் சூன்யமான கொள்ளையர் ஆட்சி யென்றும், மக்கள் அபிப்பிராயத்தை மிதித்துத்தள்ளி, அரசியல் நிர்ணய சபையைக் கலைத்திடச் சொல்லும் சதிகாரர்கள் என்றும் குறிப்பிடாத பத்திரிகையும் இவற்றுள் இருந்ததில்லை. இந்தப் பயங்கரக்குற்றச்சாட்டுகள் போல்ஷ்விக்குகளை எதிர்த்துஉலகமெங்கிலும்பரப்பப்படுகின்றன இக்குற்றச்சாட்டுகள் மீண்டும் நம்மை 'அரசாங்கம்' என்றால் என்ன என்பதை தீர ஆலோசிக்கத் தூண்டுகின்றன. இத் தகையக் குற்றச்சாட்டுகளை அறிய வேண்டுமென்றால், வதந் திகளை ஆதாரமாகக்கொள்ளாமல் நம் சொந்த அபிப்பிராயத் தைக்கொண்டு அவற்றை அலசி ஆராய்ந்து அறிவிற்குகந்த நிலையைப்பெற வேண்டுமானால், அரசாங்கத்தைப் பற்றிய தெளிவான கருத்தை நாம் பெற்றிருத்தல் வேண்டும். சகல விதமான முதலாளித்துவ நாடுகளையும், அதற்குச் சாதகமான கோட்பாடுகளையும் வாதங்களையும் இங்கு காண்கிறோம். இக் கேள்விக்குச் சரியான முறையில் பதிலளிக்கவேண்டுமாயின் இக்கோட்பாடுகளையும் கருத்துக்களையும் அதிநுட்பமாக அலசி ஆராயவேண்டும்.

ஏங்கல்ஸ் எழுதிய "குடும்பத்தின் தோற்றம், தனி சொத்து ரிமை, அரசாங்கம்" என்ற நூலின் உதவியை நாடும்படி நான் முன்னரே கூறினேன்.

> எந்த ஒரு நாட்டின் நிலமும், உற்பத்திக் கருவிகளும் தனிச் சொத்தாகக் கருதப்படுகின்றனவோ, எங்கு மூலதனம் ஆதிக்கம் செலுத்தி வருகிறதோ, அது எவ்வளவு ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாயினும்அது முதலாளித்துவ அரசாங்கமே. ஏழை விவ சாயிகளையும் பாட்டாளி வர்க்கத்தினரையும் அடக்கி ஆள முதலாளி களால் பயன்படுத்தப்படும் கருவிதான் அரசாங்கம் என அந்நூல் குறிப்பிடுகின்றது. பொது ஜன வாக்குரிமை, அரசியல் நிர்ணய

சபை, மக்கள்சபை முதலியன யாவும் வெறும் தோற்றங்களே. ஒருவகை பிராமிசரி நோட்டுகளுக்குச் சமமானவை. ஒரு பொருளின் அடிப்படையை அவை ஒருபோதும் மாற்றியமைக்காது.

## அரசாங்கத்தின் பல்வேறு தோற்றங்கள்

அரசாங்க அதிகாரத்தின் உருவங்கள் பலவகையில் வேறுபடலாம். நாட்டில் ஒரு வகையாட்சி நிலவியுள்ளபொழுது மூலதனம் தன் சக்தியை ஒருவிதத்தில் வெளிப்படுத்துகிறது. பிறிதொரு ஆட்சியில் அதன் சக்தி வேறொரு முறையில் உருவாக்கப்படுகிறது. ஆனால் அடிப்படையில், மூலதனத்தின் இரும்புக் கரங்களிலேதான் ஆதிக்கம் சிக்கிக்கொண்டிருக்கிறது.

(அங்கு வாக்குரிமை இருப்பினும்சரி இல்லாவிடினும்சரி, அல்லது குடியரசு ஜனநாயகத் தன்மையுடையதாயினும் இல்லாததாயினும் சரி) உண்மையில் ஆட்சிமுறை எந்த அளவிற்கு ஜனநாயகத் தன்மை பெற்றுள்ளதோ, அதைவிடப் பன் மடங்கு முதலாளித்வத்தின் ஆதிக்கம் ஒழுங்கற்றதாயும் ஜனவிரோதமுள்ளதாயும் இருக்கிறது. உலகிலே சிறந்து விளங்கும் ஜனநாயகக் குடியரசுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஒன்று. ஆனால் விரல்விட்டு எண்ணத்தக்க கோடீஸ்வரர்களின் ஆதிக்கம்—அமெரிக்க நாட்டைப் போல் வேறு எந்த நாட்டிலும் சீரழிந்திருப்பதையும், சமுதாயத்தையே ஆட்டிப் படைப்பதையும் காணமுடியாது. (1905-ம் ஆண்டிற்குப் பின்னர் அமெரிக்காவில் இருந்தவர்கள் இதை நன்கு உணர்வர்.) எங்கு மூலதனம் தோன்றுகிறதோ, அங்கு சமுதாயம் அடிமைப்படுத்தப்படுகிறது. இத்தகைய கேடு பயக்கும் அடிப்படையை எவ்வித ஜனநாயகக் குடியரசும், எவ்வித வாக்குரிமையும் மாற்றியமைக்காது.

# முதலாளித்துவ ஜனநாயகம்

ஜனநாயகக் குடியரசு, பொதுஜன வாக்குரிமை ஆகிய முறைகள், நிலப்பிரபுத்வ முறையினின்று ஏற்பட்ட மகத்தான முற்போக்குச் சீர்திருத்தங்கள் அல்லவா? பாட்டாளி மக்கள் ஐக்கியத்தையும் உறுதியையும் பெற இவை பெரிதும் துணைபுரிந்தன. கட்டுப்பாடான அணிவகுத்து, மூலதனத்தை எதிர்த்து ஒழுங்கான போராட்டங்கள் நடத்தவும் வழிகோலியவை மேற்சொன்ன ஜனநாயகமும், பொதுஜன வாக்குரிமையுமேதான். இவ்வுரிமைகளுக்குச் சமமான எவையுமே பண்ணையடிமைகளிடத்தில் இருந்ததில்லையென்றால், அடிமைகளைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? அடிமைகள் கிளர்ச்சிசெய்து புரட்சியெழுப்பியதும், உள்நாட்டுக் கலகங்களைத் துவக்கியதும் நாம் அறிந்ததே. ஆனால் அவர்கள் போராட்டத்தை நடத்தத் தகுந்த கட்சிகளையும், வர்க்க உணர்வு பெற்ற பெரும்பான்மையினரையும் தோற்றுவிக்க ஒருபோதும் இயலவில்லை. தங்களது இறுதியான நோக்கம் எது என்பதை அவர்களால் தெளிவாக உணர்ந்து கொள்ள இயலவில்லை வரலாற்றிலேயே மிகவும் பயங்கரமான புரட்சிக்காலங்களில்கூட, ஆளும் வர்க்கத்தினரின் கொடிய கரங்களிலே அவர்கள் வெறும் அடமானப் பொருள்கள்போல் சிக்கித் தவித்தனர். பூர்ஷ்வாக் குடியரசு பாராளுமன்றம் பொதுஜன வாக்குரிமை ஆகிய இவையனைத்தும், உலக சமுதாய முன்னேற்றம் என்ற நோக்கத்துடன் பார்க்கும்பொழுது, மாபெரும் முன்னேற்றத்தைத்தானே எடுத்துக்காட்டுகின்றன.

மனித வர்க்கம் முதலாளித்வத்தை நோக்கி நகர்ந்தது. நசுக்கப்பட்டுக் கிடந்த பாட்டாளி வர்க்கம் தன்னைப் பற்றி அறிந்துகொள்ளவும், உலகத் தொழிலாளர் இயக்கத்தைச் சிருஷ்டிக்கவும் அவர்களுக்குப் பெரிதும் வாய்ப்பளித்தது முதலாளித்வம் ஒன்றுதான். உலகிலுள்ள கோடிக்கணக்கான

தொழிலாளர்கள் கட்சிகளை உருவாக்கினர்; மக்கள் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தும் சோஷலிஸ்ட் கட்சிகளைச் சிருஷ்டித்தனர். பார்லிமெண்ட் முறையில்லாமல், வாக்குரிமையில்லாமல் தொழிலாளி வர்க்கத்தின் இத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டிருக்க முடியாது. எனவேதான் இவையாவும் ஏற்பாடுகளிடையே ஒரு பெரும் முக்கியத்வத்தைப் பெற்றிருக்கின்றன. ஒரு அடிப்படையான மாற்றம் ஏற்படுவது கடினமாயிருப்பதும் இதனுல்தான். "அரசாங்கம் கபடமற்றது; அனைவருடைய நலனையும் பாதுகாப்பதுதான் அதன் இலட்சியம்" என்ற பூர்ஷ்வாக்களின் பொய்ப் பிரச்சாரத்தை விஞ்ஞானிகள், புரோகிதர்கள், பாசாங்குக்காரர்கள் ஆகியோர் மாத்திரம் ஆதரிக்கவில்லை. முதலாளித்வப் படுகுழியிலிருந்து சமதர்மப் பூங்காவை நோக்கி சமுதாயம் துள்ளிக் குதித்து ஓடுவதையறிய இயலாதவர்களும் நஞ்சு போன்ற பழைய கோட்பாடுகளைப் பக்தியுடன் அனுஷ்டிப்பவர்களும் பெருவாரியாக ஆதரிக்கின்றனர். பூர்ஷ்வா வர்க்கத்தினரை நேரடியாகச் சார்ந்தவர்கள், மூலதனத்தின் கொடிய நுகத்தடியால் அழுத்தப்பட்டவர்கள், மூலதனத்தின் கைக்கூலிகள் ஆகியோர் மாத்திரம் போல்ஷ்விஸத்தை எதிர்த்து ஆயுதம் தாங்கவில்லை; 'பூர்ஷ்வா சுதந்திரம்' என்ற பொய்ப் பிரச்சாரத்தின் மாயையிலே சிக்கியவர்களும் போல்ஷ்விஸத்தோடு போர் தொடுக்கின்றனர். இதற்குக் காரணம் சோவியத் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டதும், அது பூர்ஷ்வா புளுகுகளை நிராகரித்ததுடன், அதன் அந்தரங்கத்தையெல்லாம் அம்பலப்படுத்திவிட்டது. மேலும் பூர்ஷ்வா ஆட்சியைப் பற்றி சோவியத் குடியரசு பின்கண்டவாறு பகிரங்கப் பிரகடனம் செய்துள்ளது; "உங்கள் ஆட்சி கபடமற்றது என்று நீங்கள் கூறுகிறீர்கள்; ஆனால் உண்மையில் எதுவரையில் சொத்துரிமை நிலவுகின்றதோ அதுவரை உங்கள் ஆட்சி, ஜனநாயகக் குடியரசாயிருப்பினும், தொழிலாளிகளை ஒடுக்க முதலாளிகள் பயன்படுத்தும்

இயந்திரமேயன்றி வேறொன்றும் இல்லை. ஆட்சி முறையில் சுதந்திரம் எந்த அளவிற்கு பயன்படுகின்றதோ, இந்த உண்மையும் அந்த அளவிற்குத் தெளிவாகப் பிரதிபலிக்கப்படுகின்றது. ஐரோப்பாவில் சுவிட்ஸர்லாந்தும், அமெரிக்காவில் ஐக்கிய நாடுகளும் இதற்குச் சான்றுகளாக விளங்குகின்றன. இவைகள் ஜனநாயகக் குடியரசு நாடுகள்தான்; அதற்கு அழகாக மெருகு கொடுக்கப்பட்டிருக்கின்றது. தொழிலாளிகளின் ஜனநாயகத்தைப் பற்றியும், பிரஜைகளின் சமத்துவத்தைப்பற்றியும் பேசப்படுகிறது. இருந்தபோதிலும், இந்த நாடுகளைப்போல் உலகில் வேறெங்குமே மூலதனத்தின் ஆதிக்கம் இவ்வளவு ஜனவிரோதமாகவும் கொடுமையாகவும் இருந்ததில்லை; வேறெங்கும் இவ்வளவு பிரத்யட்சமாகக் காணப்படவும் இல்லை. உண்மை இதுதான். சுவிட்ஸர்லாந்திலும், அமெரிக்காவிலும் மூலதனம் தான் ஆதிக்கம் செலுத்துகின்றது. இங்குள்ள தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கை நிலையில் துளியளவு உண்மையான முன்னேற்றத்தையடையும் பொருட்டு எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியின் விளைவும் உள்நாட்டுக்கலகம்தான். இந்த நாடுகளில் மிகச் சொற்பமான போர்வீரர்களும் குறிப்பிட்ட நிரந்தர சேனைகளும்தான் இருந்தன. சுவிட்ஸர்லாந்து குடிப்படை கொண்ட நாடு. ஒவ்வொருவர் வீட்டிலும் ஒரு துப்பாக்கியிருக்கும். ஆனால் அமெரிக்காவிலோ சமீப காலம் வரை நிரந்தர சேனையிருந்ததில்லை. ஆகவே வேலைநிறுத்தம் ஏற்படும்பொழுது, பூர்ஷ்வா வர்க்கம் இராணுவத்தை கூலிக்கமர்த்தி வேலைநிறுத்தத்தை உடைத்துவிடுகிறது, அமெரிக்கா சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் தொழிலாளர் இயக்கம் கடுமையாக நசுக்கி அடக்கப்படுவதைப்போல் வேறெங்கும் இல்லை. மேற்கூறிய நாட்டுப் பாராளுமன்றங்களில் மூலதனத்தின் செல்வாக்கு சக்திபெற்று விளங்குவதைப்போன்று வேறெங்கும் காண இயலாது மூலதனம்தான் சகலமும்; *பண்ட சேமிப்புப் பரிவர்த்தனைதான்

சகல சக்தியும். வாக்கெடுப்பும், பாராளுமன்றமும் வெறும் விளையாட்டுப் பொம்மைகள்தான். பிறரால் ஆட்டப்படும் சூத்திரப்பாவைகள். ஆனால் தொழிலாளிகளின் கண்கள் மேலும் மேலும் திறக்கப்படுகின்றன. சோவியத் அரசாங்கத்தின் குறிக்கோள் அதிகமதிகமாக பரப்பப்படுகின்றது. முதலாளிகளை எதிர்த்து இரக்கமின்றி போராடவேண்டியதன் அவசியத்தைத் தொழிலாளி வர்க்கம் மிகத் தெளிவாக உணர்ந்து வருகிறது.

ஒரு குடியரசு நாடு எவ்விதப் போர்வையைப் போர்த்திக் கொண்டாலும் சரி, உன்னதமான ஜனநாயகக் குடியரசாயிருப்பினும்சரி, நிலங்கள், ஆலைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் தனிச் சொத்துரிமை கொண்ட பூர்ஷ்வா குடியரசாயிருந்தால்—குறிப்பிட்ட மூலதனம் சமுதாயத்தையே கூலிக்காக அடிமைப் படுத்துமேயானால் (அதாவது நமது கட்சியின் திட்டத்திலும், சோவியத் அரசியல் அமைப்பிலும் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதை நிறைவேற்றுவிட்டால்) அந்த அரசாங்கம் பலரைச் சிலர் அடக்கியாளப் பயன்படும் இயந்திரமாகிறது. மூலதனத்தின் சக்தியைத் தகர்த்தெறியும் வர்க்கத்தாரின் கரங்களில் இந்த சாதனத்தை நாம் ஒப்படைப்போம். அரசாங்கம் என்றால் சகலருக்கும் சமத்துவம் என்ற பழைய கருத்தை நாம் புறக்கணிக்க வேண்டும். ஏனென்றால் அது வெறும் சூழ்ச்சி. சுரண்டல் இருக்கும்வரை சமத்துவம் இருக்காது. கோடிகோடியாகலாபம் குவிக்கும் முதலாளியும், வறுமையும் துயரமும் நிறைந்த தொழிலாளியும் ஒன்றாக முடியுமா? பசியுள்ள ஒரு பராரியும், பூரணமாகப் புசித்தவனும் சமமாக முடியுமா? 'அரசாங்கம் என்றால்

*Stock Exchnge

ஒரு பொதுவான ஆட்சி' என்ற பழங்கதைகளை நம்பி மூடப் பழக்கவழக்கங்களுக்குப் பயந்து அரசாங்கத்திற்கு அடிபணிந்தனர். ஆனால் அத்தகைய பாட்டாளி மக்கள், இது பூர்ஷ்வாக்களின் புளுகு என பறைசாற்றி, இந்த இயந்திரத்தை அப்புறப் படுத்தினர். பூர்ஷ்வாக்களிடமிருந்து இதை நாம் கைப்பற்றி விட்டோம். இதே சாதனத்தை உறுதுணையாகக்கொண்டு, சகல சுரண்டலையும் அடியோடு ஒழிப்போம். உலகின் எப்பகுதியிலும் சுரண்டல் அழிந்து ஒழியும்பொழுது, ஆலை முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் இல்லாதபோது, உண்டு கொழுப்பவரோ, பசியால் பரதவிப்பவரோ இல்லாது ஒழியும் ஒரு நிலையிலே—இந்தக் கோர இயந்திரத்தைக் குப்பைக் குவியலுக்கு அனுப்பிவைப்போம். பின்னர் சுரண்டலும் இராது; அதற்கு ஆதரவுகாட்டும் அரசாங்கமும் இராது. இதுவே நம் கம்யூனிஸ்ட் கட்சியின் இறுதி நோக்கம்.

★

## விரைவில்!

★

# ரஷ்யாவில் மதசுதந்திரம்!

ஸ்பாஸோவ்

★

# யார் கம்யூனிஸ்ட்?

லெனின்

ஸ்டார் பிரஸ், மேலமாசிவீதி, மதுரை.